# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 09 திங்கட்கிழமை 22.04.2024 கதிர் 166


## இது ரகசியம் அல்ல!

சுதந்திரக் கட்சியின் அதிகாரம் யாரிடம்செல்லப்போகின்றது என்பது தொடர்பில் கடுமையான சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. குடுமிப்பிடி சண்டை என்கிற அளவிற்கு இந்தப் பிரச்சினை முற்றி பற்றி எரியத் தொடங்கி இருக்கின்றது.

கட்சியின் பதில் தலைவராக நிமல் சிறிபால டி சில்வாவை நியமித்த மத்தய அரசியல் குழுக் கூட்டம் அண்மையில் சந்திரிகா தலைமையில் நடந்ததற்குப் போட்டியாக நேற்று ஒரு அரசியல் குழுக் கூ-ட்டம் நடத்தப்பட்டு அதில் விஜயதாச ராஜபக்ச கட்சியின் பதில் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் இந்தத் தெரிவை மேற்கொண்ட கட்சிக் குழுவினர் மருதானை டாலி வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்திற்குள் நுழைய முயன்றதால்அங்குகாவலுக்குநிற்கும் பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையில்ஏற்பட்ட முரண்காரணமாக பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபாலவின் வலது ☞ 2

## ஈழவேந்தன் கனடா வைத்தியசாலையில்



ஈழத் தமிழ் ஆர்வலரும் தமிழீழத்தில் பற்றுறுதி கொண்டவருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 2

## யாரையும் கடந்து சென்றுவிடமாட்டோம்

### இலவச அரிசி வழங்கும் நிகழ்வில் ரணில் உரை

பொருளாதாரத்தையும் மக்களையும்வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஆளும் தரப்பு யாரையும் கடந்து செல்லவோ விட்டுவிடவோ போவதில்லைஎனஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வெலிமடை அம்பகஸ்தோவ பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற குறைந்தவருமானம்பெறும் குடும்பங்களுக்கான அரிசி நிவாரணம்வழங்கும் 2024 தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறித்த வேலைத் திட்டத்தின் கீழ், முழு நாட்டையும் உள்ளடக்கிய ☞ 8

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக்கு விசேட நீதிமன்றப் பொறிமுறை வேண்டும்

### சரத் வீரசேகர தெரிவிப்பு

உயிர்த்தஞாயிறுகுண்டு வெடிப்புக்கள் தொடர்பான விசாரணையில் ஆளும் தரப்பில் எவ்வித தாமதமும் கிடையாது. நீதிமன்ற கட்டமைப்பிலேயே தாமதம் காணப்படுகிறது. ஆகவே விசாரணைகளுக்கு விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன்.

என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் ☞ 2

## அமைச்சரின் கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பான விசாரணைகளில் குறைபாடுகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டி விசாரணைநிறைவடைய உதவுங்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கத்தோலிக்கத் திருச்சபையிடம் கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்றையதினம் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றதிலிருந்து கர்த்தினாலுக்கும், கத்தோலிக்க திருச்சபைக்கும் தொடர்ச்சியாக அழைப்புக்களை விடுத்தே வருகின்றேன். பொலிஸார் இதுவரையில் முன்னெடுத்த விசாரணைகள்தொடர்பில்ஆராயுமாறே நான் கூறினேன். ஆனால் அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தொடர்ச்சியாக கூறுகின்றார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் யார் திட்டம் தீட்டியது, யார் செயற்படுத்தியது என்பது தொடர்பில் ஆராய ☞ 2

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புத் தொடர்பில்

# நெருங்கியோர் கைதை தவிர்க்க வேண்டியே பரிந்துரைகளைப் புறக்கணித்தார் கோட்டாபய

### கர்தினால் மல்க்கம் ரஞ்சித் நேரடியாகக் குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட 3 குழுக்களின்பரிந்துரைகளைநடைமுறைப் படுத்தினால் தனக்கு நெருக்கமானவர்களைக் கைதுசெய்ய வேண்டியிருக்கும் என்பதால் பரிந்துரைகளைநடைமுறைப்படுத்துவதில் தனக்கு நெருக்கடிகள் உள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தன்னிடம்தெரிவித்தார்என்றுகர்தினால் மல்கம் ரஞ்சித் ஏமாற்றம் வெளியிட்டுள்ளார். ☞ 2

## மலையகத்தின் பல நகரங்களிலும் நேற்று கடையடைப்பு, கறுப்பு கொடிப் போராட்டம்

மலையக நகரங்களில் நேற்று சில மணி நேர கடையடைப்பு மற்றும் கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்தப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாயாக அதிகரிக்க வலியுறுத்தியும் சம்பள உயர்வு தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சை பெருந்தோட்ட முதலாளிமார் புறக்கணித்தமைக்கான காரணத்தைக் கேட்டும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில்பொதுஅழைப் பின்பேரில்இந்தப்போராட்டம் இடம்பெற்றது. முன்னதாக கொழும்பு கோட்டைரயில்நிலையத்தின் முன்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர். இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டிலேயே இந்தப்போராட்டமும் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் ☞ 2

## சம்பள உயர்வு உடனடியாக வேண்டும் வடிவேல் சுரேஸ் ரணிலுக்கு அழுத்தம்

தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பைஉடனடியாக மேற்கொள்ளுமாறு வடிவேல்சுரேஷ்ஜனாதிபதியிடம்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெலிமடை அம்பகஸ்தோவ பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி நிவாரணம்வழங்கும்வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போது அவர் ரணில் முன்பாகப் பகிரங்கமாகவேதெரிவித்தார்.

வடிவேல் சுரேஸ் அங்கு - மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியிலி ☞ 2

## மக்கள் மீண்டும் எழுந்து நிற்க அதிகளவு காலம் எடுக்காதாம்

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கருத்து இது

ஜனாதிபதியின்பொருளாதாரத் திட்டத்தின்படி, மக்கள்மீண்டும்எழுந்து நிற்பதற்கு அதிக காலம் எடுக்காது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர்நிமல்சிறிபால டி சில்வா,

வெலிமடை அம்பகஸ்தோவபொதுவிளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி நிவாரணம் வழங்கும் 2024 தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

## சு. கட்சியின் பதில் தலைவராக நீதியமைச்சர் விஜதாச நியமனம்

### கட்சித் தலைமைகத்திற்கு அருகில் நேற்றுப் பதற்றம்

கொழும்பில் உள்ள தனியார் விடுதியில் நேற்றையதினம் கூடிய மைத்திரிபாலசிறிசேன தலைமையிலான தரப்பினர் நீதி அமைச்சர் கலாநிதி விஜதாச ராஜபக்ஷவை கட்சியின் பதில்தவிசாளராகதெரிவு செய்தனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் கூடிய தரப்பினர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை ☞ 8

## கார் பந்தய விபத்தில் 7 பேர் நேற்று இறப்பு

### தியத்தலாவையில் பரிதாபம்

தியத்தலாவையில் நேற்று இடம்பெற்ற பொக்ஸ் ஹில் சுப்பர் குறொஸ்' (Fox Hill Super Cross 2024) கார் பந்தய விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளதோடு விபத்தில் காயமடைந்த மேலும் 20 பேர் வைத்தியசாலை ☞ 2

## வெளியக கடன் மறுசீரமைப்பில் விரையில் சாதக முடிவு கிட்டும்

### நாணய நிதிய அதிகாரி நம்பிக்கை

தனியார் கடன் வழங்குநர் களுடனான மறுசீரமைப்பில் பின்னடைவுகள்தென்பட்டாலும், இருதரப்பினரும் தொடர்ந்துபேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றனர். எனவே இவ்விடயத்தில் வெகுவிரைவில் சாதகமான தீர்மானமொன்றுஎட்டப்படுமென எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

வொஷிங்டனில் நடைபெற்ற ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கையாக இருக்கும் துஷ்மந்த மித்திரபால தற்போது பதில் பொதுச்செயலாளராக தொடர்ந்து வருகின்றார். அவரது ஒருங் கிணைப்பின் கீழேயே நேற்றைய பதில் தலைவர் தெரிவு இடம் பெற்றுள்ளது. முன்னதாக, இலங்கை மன்றக்கல்லூரியில் ஒன்றுகூடிய சந்திரிகா தலைமையிலான தரப்பினர் பதில் தவிசாளரையும், தேசிய அமைப்பாளரையும் நியமித்திருந்தனர்.

பதில் தவிசாளராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும், தேசிய அமைப்பாளராக துமிந்த திஸாநாயக்கவும்நியமிக்கப்பட்டனர். இவர்களது நியமனங்கள் கட்சியின் யாப்புக்கு அமைவாகவே நடைபெற் றுள்ளன என்று அக்கூட்டத்தில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி சட்டத் தரணிபைசர் முஸ்தபா தெரிவித்தார்.

எனினும், குறித்த அரசியல்குழு கூட்டத்தினை கூட்டும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கே காணப்ப டுவதால் தற்போதைய பொதுச்செ யலாளரான மித்திரபால அவ்வித மான எந்தக் கூட்டத்துக்கும் அழைப்பு விடுக்கவில்லை. இதனால் நியமனங்கள் சட்டவிரோ தமானவை. அந்த நியமனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மைத்திரிபாலவின் தரப்பு அறிவித்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுடன் முரண்பட்டுக்கொண்டுவெளியேறிய தயாசிறி ஜயசேகர, தற்போது மைத்திரிபால அணியுடனேயே மீண்டும் சங்கமித்துள்ளார். அவர் கட்சியைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, புதியநியமனங் களை அவரும் ஏற்றுக்கொள் ளவில்லை, கட்சியின்நிர்வாகத்துக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள சந்திரிகாவின் வழக்கில் முதலாவது பிரதிவாதியாக மைத்திரிபால சிறிசேன காணப்படுவதோடு மூன்றாவது பிரதிவாதியாக நிமல் சிறிபால டி சில்வாவே காணப்படுகின்றார். அவருககு எதிராகவும்தான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. ஆகவே, நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட நிர்வாகப்பட்டியலில்உள்ளஒருவரை எவ்வாறு கட்சியின் பதில் தவிசாளர் பதவிக்கு நியமிக்க முடியும் என்பது தான் அவரது வாதமாகவுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நிமல் சிறீபால டிசில்வா தலைமையிலான புதியநிர்வாகத்தரப்பினர் ஏற்பதற்குத் தயாராக இலலை. அவற்றுக்குப் பதிலளிக்கவும் தயாரில்லை. அவர்கள் கட்சியின் நிர்வாகத் தெரிவுகள் அனைத்தும் யாப்பின் பிரகாரமே நடத்தப்பட்டது என்பதை மீண்டும் மீண்டும் கூறுவதோடு, தம்முடன் இணைந்து கட்சியை மீளக் கட்டியமைப்பதற்கு கைகோர்க்குமாறு தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றனர்.

தமது எதிர்த்தரப்பினர் தொடர்பில் எவ்விதமான விமர்சனங்களையும் வைப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. வெறுமனே மைத்திரிபால சிறிசேன தான் கட்சியை மலினப்படுத்திதனது அதிகாரத்தினை தக்கவைப்பதற்கு முனைந்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்களை மட்டும் முன்வைக்கின்றனர்.

ஆனாலும், இறுதியாக கொழும்பில் உள்ள தனியார் விடுதியில் குறித்த அணியினர் சந்திப்பொன்றை நடத்தியபோது, தயாசிறி பொதுவெளியில் தெரிவித்து வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேள்வி எழுப்பபட்டது.

குறிப்பாக, சுதந்திரக்கட்சியை, ஜனாதிபதி ரணிலின் மடியில் வைப்பதற்கு முயற்சிகளை ஆளும் தரப்புடன் இருக்கின்ற இந்தக் குழுவினர் முயல்வதாக கூறும் தயாசிறியின் கூற்று தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டபோது மட்டும் மஹிந்த அமரவீர சினமடைந்துள்ளார்.

அச்சமயத்தில் மஹிந்த அமரவீர, தயாசிறி எந்தக் கட்சிக்குச் செல்லவில்லை. அவர் ஐ.தே.கவில் இருந்தார். பின்னர் சுதந்திரக்கட்சியில் இருந்தார். பின்னர் பொது ஜன பெரமுனவுடன் இருந்தார். இப்போது சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேறினார். மீண்டும் சுதந்திரக்கட்சி பற்றி பேசுகின்றார். அவரது கட்சி மாறும் படலம் நிறைவடையாது அவர் நியாயம் பேசுவது வேடிக்கையானது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் குடுமிப்பிடிச் சண்டை தேர்தல்கள் ஆணைக்குழு வரைக்கும் சென்றுள்ளது. ஆனால் சுதந்திர கட்சிக்குள் காணப்படும் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு தமக்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லைஎன்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. சுதந்திரகட்சியின் அரசியல்குழுவால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஆவணங்கள் வியாழனன்று ஆணைக்குழு உறுப்பினர்களால் ஆராயப்பட்டது. இதன்போதே குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக, சுதந்திரகட்சியின் புதிய நியமனங்கள் தொடர்பில் தகவல்கள் மற்றும் ஆவணங்களை துமிந்த திஸாநாயக்கவினால் தேர்தல் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டதையடுத்து, கட்சியின் பதில் செயலாளர் சாரதீ துஷ்மந்த மித்ரபாலவும் புதிய நியமனங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆட்சேபனையை சமர்ப்பித்திருந்தார்.

நீதிமன்றத்தின் ஊடாக கட்சியின் உறுப்பினர்களே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எந்தவொரு கட்சியின் உள்ளக நெருக்கடியிலும் தலையிடவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் விஜயதாஸ ராஜபக்சவை பதில் தலைவராக நியமிக்கும் நேற்றைய திருக்கூத்து அரங்கேற்றப்பட்டுள்ளது. இனி கட்சியின் உண்மையான பதில் தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கும் நீதிமன்றத்தின் படிகளில் ஏறவேண்டியதாக இருக்கும்போல...

பரவாயில்லை. தமிழ் அரசுக் கட்சிக்கு வசதியாக நிறைய உதார ணங்கள்கண்முன்நடந்துகொண்டே இருக்கின்றன என்றும் சொல்லலாம் போல...

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நெருங்கியோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் நிகழ்ந்தபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரணைகளைச் செய்வதற்காக அன்றிருந்த ஆளும் தரப்பு நீதியரசர் மலல்கொட தலைமையிலான குழுவொன்றை யும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு வொன்றையும், ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றையும் நியமித்திருந்தது.

கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்ற மறுதினம் என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். அப்போது அவர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டால் தனக்கு நெருக்கமான அமைப்பு களை சேர்ந்த நபர்களை கைது செய்யவேண்டியிருக்கும் என்பதால் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தனக்கு நெருக்கடிகள் உள்ளன என்றார். அவர் அதனைக் கூறிய முறைமை எனக்கு நன்றாகவே நினைவில் உள்ளது.

அதேநேரம், தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளை அப்பதவிகளில் இருந்து நீக்கியதோடு ஒருவரை இலக்குவைத்து விசாரணைகளை மாற்றியமைத்த முறைமை சம்பந்தமாக நாம் நன்றாகவே அறிந்துள்ளோம்.

அதேநேரம் கோட்டாபயராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, அவரிடத்தில் நீதிக்காக நாம் அனுப்பியகடிதத்துக்குஎந்தவிதமான பதில்களும் வழங்கப்படவில்லை. குறைந்தபட்சம் நாம் அனுப்பிய கடிதம் கிடைத்தது என்றுகூட அவர் தரப்பில் பதிலளிக்கப்படவில்லை.

அதேபோன்று தான் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரண்டாவது கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் கடிதம் கிடைத்ததாகக்கூட பதில் கிடைக்கவில்லை.

தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக எமக்கு பல புதிய விடயங்கள் கிடைத்துள்ள நிலையில் அவை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு ஆளும் தரப்பு தயக்கம் காண்பிக்கின்றமை மிகத்தெளிவாகப் புரிகிறது.

அந்த வகையில், தற்போதைய ஆளும் தரப்புக்கு விசாரணைகளை ஆரம்பித்து உண்மை களை வெளிப்படுத்துவதில் ஆர்வ மில்லாத நிலைமையானது, அவர் களுக்கும் தாக்குதலுடன் தொடர் புடைய அடிப்படைவாத சக்திக்க ளுக்கும் அப்பால் செயற்பட்ட சக்தியொன்றுக்கும் இடையில் தொடர்புள்ளமையால் அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது என்ற நிலைப்பாட்டுக்கே நாம் வரவேண்டியுள்ளது.

ஆகவேபாதிக்கப்பட்ட மக்களுக்க நீதியைநிலைநாட்டுவதாகஇருந்தால் சுதந்திரமானதும், நீதியாதும், நம்பகத்தன்மை வாய்ததுமான விசாரணை மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அவ்வாறில்லாது உண்மையை மறைத்து மற்றவர்களை நோக்கி விரல்நீட்டுவதன் ஊடாகஎந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் நிலைமைகளைக் குணப்படுத்த முடியாது. என்றார்.

## கார் பந்தய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பந்தயத்தில் பங்குபற்றிய கார் ஒன்றுஓட்டப்பாதையைவிட்டுவிலகி கடுப்பாட்டைஇழந்துபார்வையாளர் பகுதிக்குள் சென்றதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களில் போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் 4 பேர் மற்றும் சிறுமி ஒருத்தியும் அடங்குகின்றனர். இதனைத் தொடர்ந்து போட்டியின் மீதமுள்ள பந்தயங்கள் இரத்து செய்யப்படன. அத்துடன் குறித்த விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## மலையகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுவரெலிய, கந்தப்பளை, இராகலை, உடப்புஸ்ஸலாவை, நானு ஓயா, கொட்டக்கலை, பொகவந்தலாவை, அக்கரப்பத்தனை உள்ளிட்ட பல நகரங்களில் 1700 ரூபாய் ஊதியம் உயர்வு கேட்டு கடையடைப்பும் கறுப்புக் கொடிப் போராட்டமும் இடம்பெற்றன.

கந்தப்பளை, இராகலை, உடப்புஸ்ஸலாவை, நானு ஓயா ஆகிய நகரங்களில் இடம்பெற்ற போராட்டங்களை இ.தொ.கா பிரதி தவிசாளரும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.இராஜதுறை மற்றும் முன்னால் நுவரெலியா பிரதேசசபை தவிசாளர் வேலு யோகராஜ் ஆகியோர் தலைமை தாங்கி நடத்தியதுடன் இதில் இ.தொ.கா மாநில பிரதநிதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துக்கொண்டனர்.

இதன்போது நியாயமான கோரிக்கையை வென்றெடுக்கும் வரை போராட்டம் தொடரும், கம்பனி களே தோட்ட தொழிலாளர்களை காக்க வைக்காதே! 1700 ரூபாய் சம்பளம் கொடு, அதிகாரிகளே தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டாதே, அராஜக கம்பனியே தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1700கொடு இல்லையேல் மலையகத்தை விட்டு வெளியேறு, கம்பனிகளே தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்காதே 1700 ரூபாய் ஊதியம் கொடு. என மும்மொழிகளிலும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி குரல் எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சில நகரங்களில் 1740 ரூபாய் சம்பளம் வழங்கு என வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தி ஆர்பாட்டம் செய்தனர், இராகலை நகரில் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் பேரணி நடத்தியும் வீதியை மறித்தும், வீதியில் அமர்ந்தும், வீதியில் படுத்து உருண்டும் போராட்டம் செய்தனர்.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து மீட்ட ஜனாதிபதியின் பணி பாராட்டத்தக்கது. வரிசையுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்கஜனாதிபதியால் முடிந்தது. அவருக்கு இருக்கும் வெளிநாட்டு தொடர்புகளின் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வரவும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகைகளை வழங்கவும் முடிந்தது.

மேலும், 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும பலன்கள் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. உறுமய திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் அரச சேவையின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் ஜனாதிபதியின் பொருளாதாரக்கொள்கையின் காரணமாகவே நடந்துள்ளது. அடுத்து தோட்ட மக்களின் சம்பளத்தை உடனடியாக அதிகரிப்பது தொடர்பில் பரிசீலிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன். பதுளை மாவட்டத்தில் இருந்து ஜனாதிபதியின் வெற்றி நிச்சயம் என்றே கூற வேண்டும் - என்றார்.

## வெளியக கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் மாதாந்த செய்தியாளர் சந்திப்பில் ,இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நிலைவரம் மற்றும் நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்ட அமுலாக்கம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ,இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டத்தினுள் பிரவேசித்த வேளையில், ,லங்கை மிகமோசமான நிலையிலேயே ,இருந்தது. ,இருப்பினும் தற்போது மீட்சிக்கான ஆரம்ப குறிகாட்டிகள் தென்படுகின்றன. அவற்றை நான் நேர்மறைசமிக்ஞை(பச்சைக்கொடி) என்றே கூறுவேன்.

2023இல் பின்னரைப்பாகத்தில் ஆண்டுக்கு ஆண்டு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி 3 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. 2022 செப்டெம்பர் மாதமளவில் 70 சதவீதமாக உச்சத்திலிருந்த பணவீக்கம் கடந்த மார்ச்சில் 0.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2023இல் வெளிநாட்டுக்கையிருப்பின் பெறுமதி 2.5 பில்லியன் டொலர்களால் உயர்வடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான ,இணக்கப்பாட்டுக்கு அமைவாக , இலங்கையால் முன்னெடுக் கப்பட்டுவரும் செயற்திட்டம் மிக அவசியமானதும், வினைத்திறன் மிக்கதும், உரிய பெறுபேற்றைத் தருவதுமான திட்டம் என்பதைக் காண்பிப்பதற்காகவே நான் ,இந்தத் தரவுகளைக் கூறுகின்றேன். முன்நோக்கிச்செல்லும் பாதை மேலும் கடினமானதாக, இருக்கும். எனினும் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட விடயங்களில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

நிதிக்கொள்கைவகுப்பு, கையிருப்பின்அளவைமேம்படுத்தல், மீண்டெழும்தன்மையைக்கட்டியெ ழுப்பல் போன்ற விடயப்பரப் புகளில் ,இன்னமும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதேபோன்று கடன்மறு சீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் அடையப்பட் டிருப்பதாகவே கருதுகின்றேன். உத்தியோகபூர்வ கடன்வழங் குனர்களுடனான பேச்சுவார் த்தைகளில் சிறந்த முன்னேற் றம் தென்படுகின்றது. அதே போன்று தனியார் கடன்வழங் குனர்களுடனான பேச்சு தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் நேர் மறையானவையாகக் காணப்படு கின்றன.

இப்பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. எது எவ்வாறெ னினும்அவற்றில்நாம்எவ்விதத்திலும் தலையீடு செய்யமாட்டோம். மாறாக நடப்பவற்றை அவதானிப் பவர்களாக மாத்திரமே ,இருப் போம். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோருக்கு அவசியமான ஆலோசனைகளைவழங்குவோம்.

எனவே தனியார் கடன் வழங்குனர்களுடனான மறுசீர மைப்பில் பின்னடைவுகள் தென்பட்டாலும், இருதரப்பினரும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துவருகின்றனர். எனவே இவ்விடயத்தில் வெகுவிரைவில் தீர்மானமொன்று எட்டப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

அதேவேளை, இச்செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைத் தருகின்றது. ஆனால் முன்நோக் கிச்செல்லும் பாதை ,இன்னமும் கடினமானது என்பதால், நிதியியல் மறுசீரமைப்புக்கள் மற்றும் ஆட்சியியல் நிர்வாகம், ஊழல் ஒழிப்பு உள்ளிட்ட கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டியது மிக அவசியமாகும் என்றார்.

## அமைச்சரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். ஆகவேபொலிஸார் முன்னெடுத்துள்ள விசாரணைகள் தொடர்பில் கர்த்தினால் ஆண்டகை மற்றும்கத்தோலிக்கதிருச்சபைஆகிய தரப்புக்களிடத்தில் வேண்டுகோள் விடுகின்றேன்.

விசாரணை நிலைமைகளில் குறைபாடுகள் காணப்பட்டால் அதற்கான விடயங்களை எமக்குச் சுட்டிக்காண்பித்து அந்த விசாரணைகள் பூர்த்தியடைவதற்கு எமக்கு உதவுமாறு கோரிக்கை விடுகின்றேன் என்றார்.

## ஈழவேந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மா.க.ஈழவேந்தன் உடல்நிலை மோசமாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கனடாவில் வசித்து வந்த அவர் டொரன்டோ மேற்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவரது உடல் நிலை மோசமாகஇருப்பதாகவைத்தியர்கள் தெரிவித் தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் முக்கிய உறுப்பினராக இருந்த இவர் 1970 ஆம் ஆண் டில் வி. நவரத்தினம் தொடங்கிய தமிழர் சுயாட்சிக் கட்சியில் இணைந்தார். பின்னர் மீண்டும் தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்தார். தமிழரசுக் கட்சி அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியில்ஓர் உறுப்புக்கட்சியாக இருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைக்கு ஈழவேந்தன் தலைவராக இருந்து பணியாற்றினார்.1977 வன்முறைகளில் இவர்கடுமையாகப் பாதிக்கப்பட்டார். 1980 ஆம் ஆண்டில் வேறு சிலருடன் இணைந்து தமிழ் அரசுக் கட்சியில் இருந்து விலகி, தமிழீழ விடுதலை முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தார். அக்கட்சியின் செயலாளராக ஈழவேந்தன் பணியாற்றினார்.

இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்முறைகள் கிளம்பிய காலகட்டத்தில் 1981 ஆம் ஆண்டில் இவர் தமிழ்நாட்டுக்கு சென்றார். விடுதலைப் புலிகளுக்கு மருந்துகள் கொள்வனவு செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இவரும் வேறும் நால்வரும் 1997 பெப்ரவரியில் சென்னையில் கைது செய்யப்பட்டனர். 1999 ஆம் ஆண்டில் அனைவரும் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். எனினும் ஈழவேந்தன் 2000 டிசெம்பர் 4 இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

2004நாடாளுமன்றத்தேர்தலில் ஈழவேந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டு நாடாளுமன்றம் சென்றார். மூன்று மாதங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்துக்குச் செல்லாமல் விட்டதை அடுத்து இவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2007 நவம்பரில் பறி போனது.

ஈழவேந்தன் இலங்கையில் இருந்து கனடாவுக்குப் புலம் பெயர்ந்தார். 2010 மே மாதத்தில் நாடுகடந்ததமிழீழ அரசின் உறுப்பி னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மன்னார் பேசாலை கிராமத்திற்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் வருகை

## மக்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதாக உறுதி



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பேசாலை கிராமத்தில் மிக நீண்ட காலமாகப் பழைமை வாய்ந்த ஐஸ் தொழிற்சாலை கிராமத்தின் பிரதான பகுதியில் பாழடைந்த நிலையில் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

குறித்த ஐஸ் தொழிற்சாலை வளாகத்தில் முறை கேடான செயல்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாக மக்களால் முறைப்பாடுகளும் முன் வைக்கப்பட்டு வந்தன.

குறித்த ஐஸ் தொழிற்சாலை மிக நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் காணப்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளார்கள். பேசாலை கிராமத்தில் தபால் அலுவலகம் தனியார் கட்டடத்தில் வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகிறது. பஸ் தரிப்பு நிலையம் பிரதான வீதியிலேயே பஸ்கள் தரித்து இருக்கின்றமை பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வந்த நிலையிலும், சந்தை கட்டடத் தொகுதி இல்லாமல் கிராமத்தின் ரயில்வே பிரதான வீதியில் குறித்த நாள்களில் வியாபார நடவடிக்கை காணப்பட்டு வருகிறது.

மேலும் ஆயுர்வேத வைத்திய நிலையம் வசதி குறைந்த ஒரு சிறிய மண்டபத்தில் இடம்பெற்று வந்தது.



இந் நிலையை கருத்தில் கொண்டு குறித்த கிராம மக்கள் பழைய ஐஸ் தொழிற்சாலை மற்றும் அதனோடு கூடிய இடம் குறித்த திட்டங்களுக்கு வசதியாக காணப்படும் நிலையில் அபிவிருத்தியை நோக்கியாக குறித்த கிராம மக்கள், கடல் தொழில் அமைச்சுக்கு கீழ் உள்ள குறித்த இடத்தை கோரிக்கையாக குறித்த திட்டங்களுக்கு தந்து உதவுமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சனிக்கிழமை காலை பேசாலை பகுதிக்கு விஜயம் செய்து ஐஸ் தொழிற்சாலை மற்றும் மீனவ கூட்டுறவுச் சங்க அலுவலகம் மற்றும் கடற்கரை பகுதியையும் பார்வையிட்டார்.

இந் நிலையில் தமது தேவைகளை வலியுறுத்தி பேசாலை கிராமத்தின் மீனவர் அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் ,பொதுமக்கள் ஒன்று கூடி பேசாலை கிராமத்தின் உதவி பங்கு தந்தை அவர்களின் தலைமையில் அமைச்சரை ஐஸ் தொழிற்சாலை பகுதியில் வரவேற்று குறித்த இடத்தை அமைச்சரும் மக்களும் பார்வையிட்டு தமக்கான நான்கு கோரிக்கைகளை வலியுறுத்தி அமைச்சரிடம் முன்வைத்தனர்.

இதனை அடுத்து அமைச்சர் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய செப மண்டபத்தில் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளைத் தாம் நிறைவேற்றி தருவதாக வாக்களித்தார்.

பழைய ஐஸ் தொழிற்சாலையை அகற்றுவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கவும் மக்கள் கோரிய திட்டங்களை அமுல் படுத்துவதற்கான நடவடிக்கையையும் முன்னெடுப்பதாகத் தெரிவித்தார்.

இதனை அடுத்து பேசாலை மீனவர் கூட்டுறவு சங்க அலுவலகத்திற்கும் கடற்கரை பகுதிக்கும் சென்று பார்வையிட்டு மீனவர்கள் கோரிய எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளிட்ட இந்திய மீனவர்களின் செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.(05)



# சாவகச்சேரி சமுர்த்தி வங்கி அமைவிடம்; களத்திற்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ்



சாவகச்சேரி பிரதேச சமுர்த்தி வங்கிக்கு நகரப்பகுதியில் ஓர் இடத்தை வழங்குவதில் பிரதேச செயலகம் மற்றும் நகரசபைகளுக்கு இடையே நீண்ட காலமாக நிலவும் இழுபறி நிலைமைக்குதீர்வுகாணும்வகையில் குறித்த அமைவிடத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கள விஜயம் மேற்கொண்டிருந்தார்.



பொது மக்களுக்கு ஓர் இலகுவான சேவையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலும்குறித்தபிரச்சினைக்கு தீர்வை மையப்படுத்தியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்த நேரடி கள விஜயம் இடம்பெற்றது.

இந்த விஜயத்தில் யாழ்.அரச அதிபர் பிரதீபன் , மாவட்டத்தின் சமுர்த்தி பணிப்பாளர் சத்தியசோதி, கூட்டுறவுஆணையாளர்தேவனந்தினி பாபு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும்சாவகச்சேரிபிரதேசசெயலாளர், நகர மற்றும் பிரதேசசபை செயலாளர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திப் பணிக்கான நடைபவனி!



யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திப் பணிகளுக்கான நடைபவனி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையும் இணைந்து இந்த நடைபவனியை ஏற்பாடு செய்திருந்தது.

வட மாகாண பிராந்திய சுகாதார பணிமனை மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிமனை என்பன இதில் பங்கேற்றன.







ஊர்காவற்றுறை வைத்தியசாலை நோயாளர் விடுதியொன்றைக் கட்டுவதற்கான நன்கொடைகளைக் கொடையாளிகளிடமிருந்துபெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வின் நிமிர்த்தமும் மக்கள் மத்தியில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணியளவில் ஆரம்பமான இந்த நடைபவனி பண்ணை வீதி வழியாகசென்று, ஊர்காவற்றுறை வைத்தியசாலையை அடைந்தது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதிக்கான தேடலின் உண்மை முகம்

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களின் 5ஆம் ஆண்டு நனைவு நாள்நேற்று. இதனையொட்டி கிறிஸ்தவ தேவாலயங்களில்பல்வேறு நினைவு நிகழ்வுகளும் இடம்பெற்றன. முதன்மையான நிகழ்வு கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய இலங்கையின் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகை முக்கியமான ஒரு விடயத்தை வெளிப்படுத்தினார். பதவியை விட்டு விரட்டப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவியேற்றுக்கொண்ட அடுத்த நாளே உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் குறித்துத் தன்னுடன் பேசினார் என்றும் அப்போது, விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் தனக்கு வேண்டப்பட்ட நபர்களைக் கைது செய்யவேண்டி இருக்கும் என்பதால் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாது என்று அவர் தன்னிடம் நேரடியாகவே தெரிவித்தார் என்றும் கூறியிருக்கின்றார் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்.

"கோட்டாபய அரசுத்தலைவராகப் பதவியேற்ற மறுதினம் என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். அப்போது அவர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் தனக்கு நெருக்கமான அமைப்புகளை சேர்ந்த நபர்களை கைதுசெய்யவேண்டியிருக்கும் என்பதால் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தனக்கு நெருக்கடிகள் உள்ளன என்றார். அவர் அதனைக் கூறிய முறைமை எனக்கு நன்றாகவே நினைவில் உள்ளது.

அதேநேரம், தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளை அப்பதவிகளில் இருந்து நீக்கியதோடு ஒருவரை இலக்கு வைத்து விசாரணைகளை மாற்றியமைத்த முறைமை சம்பந்தமாக நாம் நன்றாகவே அறிந்துள்ளோம்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, அவரிடத்தில் நீதிக்காக நாம் அனுப்பிய கடிதத்துக்கு எந்தவிதமான பதில்களும் வழங்கப்படவில்லை. குறைந்தபட்சம் நாம் அனுப்பிய கடிதம் கிடைத்தது என்றுகூட அவர் தரப்பில் பதிலளிக்கப்படவில்லை. அதேபோன்று தான் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரண்டாவது கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் கடிதம் கிடைத்ததாகக்கூட பதில் கிடைக்கவில்லை.

தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக எமக்கு பல புதிய விடயங்கள் கிடைத்துள்ள நிலையில் அவை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு ஆளும் தரப்பு தயக்கம் காண்பிக்கின்றமை மிகத்தெளிவாகப் புரிகிறது. தற்போதைய ஆளும் தரப்புக்கும் விசாரணைகளை ஆரம்பித்து உண்மைகளை வெளிப்படுத்துவதில் ஆர்வமில்லாத நிலைமையானது, அவர்களுக்கும் தாக்குதலுடன் தொடர்புடைய அடிப்படைவாத சக்திக்களுக்கும் அப்பால் செயற்பட்ட சக்தியொன்றுக்கும் இடையில் தொடர்புள்ளமையால் அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது என்ற நிலைப்பாட்டுக்கே நாம் வரவேண்டியுள்ளது'' என்று கர்தினால் தனது உரையில் தெரிவித்தார்.

அதிர்ச்சியூட்டும் இந்தத் தகவல் இலங்கையில் குற்றவாளிகளுக்கு தண்டனை விலக்களிக்கப்படும் போக்கின் ஆகப் பிந்திய உதாரணம். போரின்போது தமிழ் மக்களுக்–கு எதிராக நிகழ்த்தப்பட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பிலும் இலங்கையின் ஆளும் தரப்பினர் இதுபோன்றே திட்டமிட்ட, பொறிமுறை ரீதியான தண்டனை விலக்களிப்பைக் கடைப்பிடித்து வருகின்றனர். தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட போர்க் குற்றங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமற்போகச் செய்தல்கள் உட்படப் பல குற்றச் செயல்கள் தொடர்பிலும் இதுவரையில் நீதி நிலைநாட்டப்படவில்லை. மட்டுமன்றி அந்தக் குற்றங்களைப் புரிந்தவர்களை இலங்கையின் அரச பொறிமுறை பேணிப் பாதுகாத்தும் வருகின்றது.

இந்தப்போக்குக்குஎதிராகத்தமிழர்கள்நீண்டநெடியபோராட்டத்தை நடத்தி வருகின்றார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் இந்தப் போராட்டம் கடந்த 15 வருடங்களாகத் தொடர்கின்றது. இன்று உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களுக்காக குரல் கொடுக்கும் பேராயர் தமிழர்களின் இந்த நீதிக்கான போராட்டத்தில் ஒருபோதும் பங்கெடுத்துக்கொண்டவரில்லை. தமிழ் கத்தோலிக்க மதகுருமார் மீதான நீதிக்குப் புறம்பான கொலைகள் குறித்துக்கூட அவர் இத்தகு நீதிக்கான போராட்டங்களை முன்னெடுத்தவரல்லர். அப்போதெல்லாம், இது சிங்கள நாடு இங்கு மற்றையவர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்களை அனுசரித்துத்தான் வாழவேண்டும் என்று வறட்டு வேதாந்தம் பேசி, அரச பொறிமுறையின் அட்டூழியங்களை அனுமதித்து வந்தார். இன்று அதன் விளைவுகளைத்தான் அனுபவிக்கிறார்.

இத்தனைக்குப் பின்னரும்கூட அவர் தமிழ் மக்கள் பக்கமுள்ள நியாயங்களைஏற்றுக்கொண்டுஅவர்களின்நீதிக்கானபோராட்டத்தில் பங்கெடுப்பதற்கோ அதற்கு ஆதரவுக் கரம் நீட்டுவதற்கோ தயாரில்லை என்பதைப் பார்க்கும்போது அவரது போராட்டமும் நீதிக்கான தேடலும் பக்கச் சார்பானவையாகத்தான் தோன்றுகின்றது.

# இஸ்ரேல் - ஈரான் பரஸ்பர தாக்குதல்; அபாயகரமான மத்திய கிழக்கு போர்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை (19/4/24) அதிகாலை ஈரான் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. ஈரானின் இஸ்பஹான் நகரில் உள்ள விமானப்படை தளத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியிள்ளது. ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதலை அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.



இஸ்ரேலின் ட்ரோன் தாக்குதலை எதிர்கொள்ள இஸ்பஹான் பகுதியில் உள்ள அணு உலையை சுற்றிய பகுதியில் வான்வழித் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் ஆயுதங்களைப் பயன்படுத்தினோம்என்றுஈரானியஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இத்தாக்குதல் பற்றி ஈரானோ, இஸ்ரேலோ அதிகாரபூர்வமாக ஏதும் தெரிவிக்கவில்லை. ஆயினும் ஈரான் உயரதிகாரி ஊடகத்துக்கு அளித்துள்ள பேட்டியில், இஸ்ரேலுக்கு உடனடியாக பதிலடி தரும் திட்டம் இப்போதைக்கு இல்லை எனக் கூறியுள்ளார்.

இதற்கு முன்பாக கடந்த கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல் 14இல் இஸ்ரேல் மீது ஈரான் சுமார் 300 ஏவுகணைகள்மற்றும்டரோன்குண்டுகளைவீசியது. சுமார் 5 மணி நேரம் நடந்த இந்தத் தாக்குதலில் 99 சதவீதத்தை நடுவானில் இடைமறித்து அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைகள் அழித்தன. இதனால் ஈரான் - இஸ்ரேல் இடையே போர் மூளும் சூழல் ஏற்படும் அபாயம் பெரியளவில் ஏற்பட்டது.

மத்தியகிழக்குப்பகுதிகளில்காட்சிகள்பெரியளவில் மாறி வருகிறது. இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர்ச் சூழல் அதிகரித்துள்ள இந்நிலையில், ஈரான் - இஸ்ரேல், படை வல்லமை குறித்து ஆராய்வது அவசியமாகும்.

### ஈரானின் படைபலம் :

ஈரான் விமானப் படையின் பலம் குறைவாக இருந்தாலும், ஈரானின் ஏவுகணை பலம் அதன் இராணுவ பலத்தின் முக்கிய அம்சமாக உள்ளது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிக அளவிலான ஏவுகணைகளை ஈரான் வைத்திருக்கிறது என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

அவற்றில்பெரும்பாலானவைநீண்டதூரம்சென்று தாக்கும்திறன்மற்றும்நடுத்தரதொலைவுக்குச்சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகள் அதிகமாக உள்ளன. ஏவுகணைகள் இன்னும் வேகமாக பயணிப்பதற்காக, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தயாரிக்கும் நோக்கில் தங்கள் விண்வெளி தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் ஈரான் முயற்சி மேற்கொண்டுள்ளது.

ஈரான் இராணுவத்தில் பல்வேறு நிலைகளில் 523,000 வீரர்கள் இருப்பதாக பிரிட்டனைச் சேர்ந்த சர்வதேசஇராணுவஆய்வுகள்நிலையம்கூறியுள்ளது. இதில் வழக்கமான இராணுவப் பணியில் உள்ள 350,000 பேரும், இஸ்லாமிய புரட்சிப் பாதுகாப்புப் படைப் பிரிவுகளில் (றூயூறூளீ-ஐ.ஆர்.ஜி.சி) உள்ள 150,000பேரும் அடங்குவர்.

### இஸ்லாமிய புரட்சிப் படை:

ஐ.ஆர்.ஜி.சியின் கடற்படைப் பிரிவுகளில் 20,000 பேர் உள்ளனர். ஹோர்முஸ் நீரிணை பகுதியில் ஆயுதம் ஏந்திய கண்காணிப்புப் படகுகளை இந்தக் குழு இயக்கி வருகிறது. உள்நாட்டுப் புரட்சியை ஒடுக்குவதற்குஉதவியதன்னார்வலர்படைப்பிரிவான பாசிஜ் பிரிவையும் ஐ.ஆர்.ஜி.சி கட்டுப்படுத்துகிறது.

இந்த படைப் பிரிவு பல நூறாயிரம் பேரை திரட்டும் திறன் கொண்டது. ஈரானில் இஸ்லாமிய அமைப்பு முறையைப் பாதுகாப்பதற்காக 40 ஆண்டுகளுக்குமுன்புஐ.ஆர்.ஜி.சிஉருவாக்கப்பட்டது. அப்போதிருந்து முக்கியமான இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக அது செயல்பட்டு வருகிறது.

வழக்கமான இராணுவத்தை விட இதில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை குறைவுதான் என்றாலும், ஈரானில் வலிமையான இராணுவ படைப்பிரிவாக இது கருதப்படுகிறது. அமெரிக்காவால் கொல்லப்பட்ட ஜெனரல் காசெம் சுலைமானி தலைமையில் செயல்பட்டு வந்த 'குட்ஸ்' படைப் பிரிவு, வெளிநாடுகளில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது.

நேரடியாக ஈரான் ஜனாதிபதி அயதுல்லா அலி காமேனியுடன் தொடர்பில் உள்ள பிரிவு அது. அதில் 5,000 பேர் இருக்கின்றனர் என்று நம்பப்படுகிறது. அந்தப் பிரிவு தற்போது சிரியாவில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

### இஸ்ரேல் உலகின் சக்தி வாய்ந்த ராணுவம்:

உலகின் மிக சக்திவாய்ந்த இருபது இராணுவங்களில் ஒன்றான இஸ்ரேலின் மொத்த ராணுவ பலம் தொடர்பில் பல முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன. இஸ்ரேலிடம் 601 அதி நவீன ராணுவ விமானங்களும் தாக்குதலுக்கு பயன்படுத்தும் வகையில் 48 ஹெலிகொப்டர்களும் 2,200 ராணுவ டாங்கிகளும் உள்ளன. 300 பலமுனை ராக்கெட் வீச்சு அமைப்புகள் உட்பட 1,200 பீரங்கிகளும் இஸ்ரேல் ராணுவத்திடம் உள்ளன.

7 ராணுவ கப்பல்களும் 6 நீர்மூழ்கி கப்பல்களும் உள்ளன. மொசாட் உட்பட உலகின் மிகவும் திறன்மிக்க உளவுத்துறை அமைப்பை இஸ்ரேல் கொண்டுள்ளது. ராணுவத்திற்காக 2022இல் மொத்தம் 23.4 பில்லியன் டொலர்களை இஸ்ரேல் செலவிட்டுள்ளது.

ஆனால் 202இல் செலவிட்டுள்ள தொகையில் இருந்து இது 4.2 சதவீதம் குறைவு என்றே கூறப்படுகிறது.

அத்துடன் அமெரிக்காவிடம் இருந்து ஆண்டுக்கு 3 பில்லியன் டொலர் நிதியுதவியை இஸ்ரேல் பெற்று வருகிறது. 201ஈல் அமெரிக்க 10 ஆண்டுகளுக்கான சுமார் 38 பில்லியன் டொலர் ஆயுத ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இதில் 5 பில்லியன் டொலர் தொகைக்கு ஏவுகணை வாங்க பயன்படுத்தப்படும் என்றே கூறப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் ராணுவ உதவிக்கென சுமார் 58 பில்லியன் டொலர் தொகையை அமெரிக்கா இஸ்ரேலுக்கு அளித்துள்ளது.

### இஸ்ரேல் படை உருவாக்கம்:

இரண்டாம் உலகப்போரின் பின்னர், 26 மே



1948ஆம் ஆண்டில் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் டேவிட் பென்-குரியனின் உத்தரவின்படி, ஹகானா துணை இராணுவப் படை குழுவிலிருந்து படைக்கு கட்டாய ஆட்சேர்க்கும் இராணுவமாக போராளிக் குழுக்களான இர்குன், லெகி என்பவற்றை உள்வாங்கி உத்தியோகபூர்வமாக இஸ்ரேல பாதுகாப்புப் படைகள் உருவாக்கப்பட்டன.

குறுகிய காலத்தில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் ஈடுபட்ட போர்களின் எண்ணிக்கை, எல்லை முரண்பாடுகள் என்பன அவற்றை உலகிலுள்ள அதிக சமர் பயிற்சி (அனுபவம்) பெற்ற இராணுவங்களில் ஒன்றாக்கியுள்ளது. அதேவேளை அவை மூன்று முன்நிலைகளில் இயங்குகின்றன.

இதேவேளை இஸ்ரேல் - ஈரான் தங்களுக்கு இடையேயான மோதலைப் பெரிதாக்கி மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிக்க வேண்டாம் என ஐரோப்பிய யூனியன் கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அமைதி நிலவ அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை இருதரப்புமே தவிர்க்க வேண்டும் என்று ஐ.நா சபையும் வலியுறுத்தியுள்ளது.

# உயிர்த்த ஞாயிறு நினைவு நிகழ்வு சீனன்குடாவில் நேற்று நடந்தது



உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் நடத்தப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகின்றன இதனை முன்னிட்டு நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை மறைமாவட்ட சீனன்குடா புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குதந்தை மற்றும் பங்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நேற்று காலை 9:00 மணிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

சீனக்குடாஅந்தோனியார்ஆலயத்தின் பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய அருள் தந்தை அண்டன் தேவசீலன் தலைமையின் கீழ் நடைபெற்றது.

ஆலயத்தில்திருப்பலிஒப்புக்கொடுத்து ஜெபத்தினையும் ஆராதனையும் செய்துவிட்டு ஆலயத்திலிருந்து வீதிக்கு வருகை தந்து வீதியில் மெழுகுவர்த்தி ஏற்றிநினைவஞ்சலியும்செலுத்தப்பட்டது.

இந்தநிகழ்வில்அந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கலந்து கொண்டனர்.(05)





# சுகாதாரத் துறைகள் சார்ந்துள்ள சவால்களை எதிர்கொள்ள தயார்

## வடக்கு ஆளுநர் திடசங்கற்பம்



மாகாணத்தில்சுகாதாரத்துறையில்ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளதாக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் சேவையாற்றும் சுகாதார துறைசார்ந்த உயர் அதிகாரிகளுக்கும், ஆளுநருக்கும் இடையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போதே இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுகாதார சேவையை முன்னெடுப்பதில் மாவட்ட ரீதியில் காணப்படும் இடர்ப்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளால் ஆளுநருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

சில பகுதிகளில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும், பௌதீக வளப் பற்றாக்குறை பாரிய சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, நோயாளர்களின் உரிமைகளைப்பாதுகாத்துகரிசனையுடன்செயற்பட வேண்டிய பொறுப்பு சுகாதார அதிகாரிகளிடம் காணப்படுவதாகவும், கொள்கைகளை பின்பற்றி அதிகாரிகள் செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளதாகவும் ஆளுநர் கூறினார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# மட்டக்களப்பு, ஆரையம்பதி கடற்கரையில் பட்ட திருவிழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வமத சின்னங்களையிட்டு பட்டம் செய்து பறக்கவிட்ட மாணவன் முதலிடம் மட்டக்களப்பு ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த



நிகழ்வில் ஆரையம்பதி கந்த சுவாமி ஆலயத்தின் பிரதம குரு உமாசுத சர்மா , கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் வேலுப்பிள்ளை ஈஸ்வரன் உட்பட பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தால் முதல் தடவையாக இந்தப் பட்டத் திருவிழா அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த பட்டத் திருவிழாவில் 30 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றினர்.

இதில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் ஆரையம்பதியைச் சேர்ந்த ரவீந்திரன் சோபிதன் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்த பட்டத் திருவிழாவில் பெருமளவிலான பொது மக்கள், சிறுவர்கள் கலந்து கொண்டு பட்டத் திருவிழாவைக் கண்டுகளித்தனர். (05)

# கல்முனை பொதுச்சந்தையில் உணவு சோதனை: வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர பொதுச்சந்தையில் பாரியளவிலான உணவுச்சோதனை சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது சுகாதார நடைமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம். அஸ்மி தெரிவித்தார்.





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹிலா இஸ்ஸடீனின் பணிப்புரைக்கமைவாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எம்.பாறூக், பொது சுகாதார பரிசோதகர்களான எம்.ஜுனைடீன், ஜே.எம்.நிஜாமுடீன், ஐ.எல்.எம்.இத்ரீஸ், எம். ரவிச்சந்திரன் ஆகியோரால் பொது சந்தையில் உள்ள வர்த்தக நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், உணவு விற்பனை நிலையங்கள் சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் பொது சந்தை வர்த்தகர்களுக்கு சுகாதார ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



இதன்போது பாவனைக்கு உதவாத மரக்கறி வகைகள் கைப்பற்றப்பட்டதுடன் சுகாதாரத்திற்கு பொருத்தமற்ற முறையில் காணப்பட்ட வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார். (05)



## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்த வருமானம் பெறுவோருக்குஇன்றுவழங்கப்படும் இருபதுகிலோஅரிசியின்பலன்இந்த மக்களுக்குமிகவும்பெறுமதியானது. ஆனால் இந்த பலன்களை நீண்ட கால அடிப்படையில் மக்களுக்கு வழங்கக்கூடாது. ஜனாதிபதியின் பொருளாதாரத்திட்டத்தின்படி, மக்கள் மீண்டும் எழுந்து நிற்பதற்கு அதிக காலம் எடுக்காது.

மக்களின் கைகளுக்கு அதிக வருமானத்தை கொண்டு வரும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி தற்போது செயற்பட்டு வருகின்றார். அதனை உலகில் யதார்த்தமாக்கி வருகிறார்.

இதன் விளைவாக, இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வங்குரோத்தடைந்த நாட்டை மீட்டெடுக்க முடிந்தது. மேலும், மக்களின் சிரமமான வாழ்க்கைச்சூழலிலிருந்துகாப்பாற்ற 15,000 ரூபாய் 'அஸ்வெசும' மூலம் வழங்கப்பட்டது. மேலும், மக்களுக்குத்தேவையானகாணிகள் 'உறுமய' திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இவை வாய்ப்பேச்சிற்கு வழங்கிய வாக்குறுதிகள்அல்ல. கடந்தஇரண்டு வருடங்களில் ஜனாதிபதி விதைத்த யதார்த்தம் இதுதான்.' என்றார்.

## யாரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்த வருமானம் பெறும் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் பத்து கிலோ அரிசி வழங்கப்படும். பதுளை மாவட்டத்தின் பதினைந்து பிரதேசசெயலகப்பிரிவுகளில்உள்ள 191,548பயனாளிகுடும்பங்கள்அரிசி மானியம்பெறத்தகுதிபெற்றுள்ளன. ஆயிரம் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும்நிகழ்வின்அடையாளமாக 25பயனாளிகளுக்குஜனாதிபதியின் கைகளால் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன. இதேவேளை, நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர்களின்மேற்பார்வையில் தெரிவுசெய்யப்பட்டபயனாளிகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது.

நிகழ்வில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

நான் 2022 தமிழ், சிங்கள புத்தாண்டை கம்புருகமுவ பிரதேசத்தில்கழித்தேன். அங்குள்ள எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாகமக்கள்இரவுவரைகாத்திருப் பதைக்கண்டேன்.ஆட்சியாளர்களை மக்கள்கடுமையாககுற்றம்சாட்டினர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து இன்று நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்தை சிலருக்கு நினைத்துக்கூட பார்ப்பது கடினமாக உள்ளது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அந்த முடிவுகள் மக்கள்விரும்பாத முடிவுகள் என்றே சொல்ல வேண்டும். முன்னர் இந்த நாட்டின் ஆளும் தரப்பு ஒரு கட்சிக்கு உரிதானதாகவே இருந்தன. இது தவிர இரண்டு அல்லது மூன்று கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கும். ஆனால் இந்த அரசு அப்படியானதல்ல. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் மட்டுமே இருந்தேன். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கியமக்கள்சக்திஎனஅனைவரும் ஆளும் தரப்புடன் இணைந்தனர். இது நாட்டின் தேவைக்காகவே உருவாக்கப்பட்டது. இந்த ஆளும் தரப்பை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனச் சிலர் கூறினர்.

எப்படியிருந்தாலும், நாட்டு நலனுக்கான நோக்கங்களை வெற்றிகரமாகசெயல்படுத்தினோம். அதற்காக பிரதமர் மற்றும் அமைச்சரவைக்குநன்றிதெரிவித்துக் கொள்கிறேன்.மேலும், இந்த இக்கட்டான நேரத்தில் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு ஆளுநர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிற அதிகாரிகள் பெரும் சேவை செய்துள்ளனர். நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டதால்தான் இன்று இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா வணிகம் எதிர்பாராத வகையில் வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் மூலம் மக்களின் வருமானமும் அதிகரித் துள்ளது. மேலும், கிராமப்புற பொருளாதாரத்தைக் கட்டியெழுப் புவதற்கான விரிவான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அந்த பணம் இன்று அரச மற்றும் தனியார்துறைகளில்சம்பளஉயர்வு மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி நாம் அனைவரும் கடினமான காலங்களில் கஷ்டப்பட்டோம். இன்று நாடு அபிவிருத்தியடைந்து வருகின்ற போதிலும்ஒருபிரிவினர் இன்னமும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி , தொழிற்துறை வீழ்ச்சி, வேலை இழப்பு போன்ற காரணங்களால் இன்னும் பலர் சிரமத்தில் உள்ளனர்.

நாட்டின் வளர்ச்சியின் பயனை அனைவரும் பெற வேண்டும். எனவே, அஸ்வெசும திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பலனை மூன்று மடங்காக உயர்த்த நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அத்துடன் தமிழ், சிங்கள, புத்தாண்டுகாலத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு தலா 10 கிலோ அரிசியை இம்மாதம் மற்றும் அடுத்த மாதம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த அரிசியை பாரிய அரிசி ஆலைஉரிமையாளர்களிடமிருந்து வாங்கவில்லை. சிறு அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருந்து. இவற்றை வாங்கும் போது சந்தை விலையை விட அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். அப்போது அந்த சிறு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும்.

நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களையும் கட்டியெழுப்புவதில் யாரையும் கடந்து செல்வதற்கோ அல்லது விட்டு விடவோ நாம் தயாரில்லை. எனவே, நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது. இன்று, சுற்றுலாத்துறை மூலம் கிராமங்களுக்கு பணம் கிடைக்கிறது. மேலும், விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. வலுவான ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று சொல்ல வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தைகட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அந்த மக்களுக்கு காணி வழங்குவதற்கான தீர்மானம் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 20 இலட்சம் பேருக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் உள்ள 50,000 குடியிருப்புகளின்உரிமையைஅந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தவேளையில்நாம்அரசியல் ரீதியாக பிளவுபடக்கூடாது. நாம் பிரிந்திருந்தால் இன்று நாட்டில் இந்த முன்னேற்றத்தை காண முடியாது. கட்சி அரசியலை மறந்து முன்னேற வேண்டும். அத்துடன், இந்த ஊவா பிரதேசத்தின் அபிவிருத்திக்காக சில பாரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள் ளோம்.' என்றார்.

## சு. கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த எட்டாம் திகதி பதில் தவிசாளராக தெரிவு செய்துள்ள நிலையில் ஏட்டிக்குப் போட்டியாக இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதற்கான முன்மொழிவை முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன முன்வைத்ததோடு, சிரேஷ் உறுப்பினர் பேராசிரியர் ரோஹண பியதாச அதனை வழிமொழிந்துள்ளார்.

இதனையடுத்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் விஜதாச ராஜபக்ச தலைமையிலான தரப்பினர்கட்சியின்தலைமையகத் திற்குள் பிரவேசித்து அங்கு உள்நுழைவதற்கு முயற்சித்தனர்.

இதன்போது அங்கிருந்த பிறிதொரு குழுவினர் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சித்தனர். பொலிஸாரின் உத்தரவினை மீறி பிரவேசிக்க முடியாது என்றும் அறிவித்தனர். இதனால் புதிய தவிசாளருக்கு ஆதரவான தரப்பினரும் குறித்த குழுவினருக்கும்இடையில்முறுகல் நிலைமை ஏற்பட்டது.

இந்நிலையில் புதிய தவிசாளர் அங்கிருந்து வெளியேற் றப்பட்டதோடு, பொலிஸார் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்

# பன்னாட்டு அறிஞர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வியியலாளர்; அமரர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம்

## சிறிதரன் எம்.பி. அஞ்சலி

யாழ்.மண்ணின் பெரியவிளானில் பிறந்து, உலக அரங்கில் ஈழத்தமிழர்களுக்கான அடையாளத்தை ஆழப்பதித்த பெருமனிதன் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த துயருற்றோம்.

- விளையாட்டு ஜாம்பவானின்; மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்; மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பன்னாட்டு அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்க் கல்வியியலாளராக, சர்வதேச விளையாட்டு வீரராக, சமூக செயற்பாட்டாளராக என பல்துறை விற்பன்னராக விளங்கிய அவரின் மறைவு ஈழத்தமிழர்களின் அடையாள மனிதர்களுள் ஒருவரது மறைவாக அமைந்துள்ளது என்றே நான் கருதுகிறேன்.

1952 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகளிலும், மூன்று ஆசியப்போட்டிகளிலும் இலங்கைக்காக விளையாடிய பெருவீரராக அடையாளம் பெறும் இவர், இலங்கையின் முன்னணி உயரம் பாய்தல் வீரராகவும், சாதனையாளராகவும் திகழ்ந்தவர். அனைத்துலகக் களப்போட்டியொன்றில் முதன்முதலாக இலங்கைக்கான தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்தவர் என்னும் வரலாற்றுப் பெருமையின் சொந்தக்காரர். 1958 இல் டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று உயரம்பாய்தலில் புதிய ஆசிய சாதனையை நிறுவியதோடு, தங்கப்பதக்கத்தையும் பெற்றவர்.

விளையாட்டு வீரர் என்கிற அடையாளங்களைக் கடந்து, ஒரு கல்வியியலாளராகவும் தனித்துவம் பெற்று மிளிர்ந்தவர். இலங்கை, சியேரா லியோனி, பப்புவா நியூகினி மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் யுனெஸ்கோவிலும் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளமை தமிழர்களின் கல்வித்தரநிலை உயர்வுக்கான பெரும் சான்று எனலாம்.

மிக உயர்ந்த எண்ணங்களைக் கொண்ட, எளிதில் அணுகத்தகு சாதாரண மனிதனாக விளங்கிய அவரின் இயல்புநிறை பண்புநிலையை, யாழ்.ஆனைக்கோட்டையில் அவரை நேரில் சந்தித்த பொழுதொன்றில் அறிந்துகொண்டேன்.

தமிழ் மக்களின் அடையாளங்களை மீள நிறுவுவதாயின்அதுஅடுத்ததலைமுறையின்கல்விப்பாரம் பரியத்தால் மட்டுமே சாத்தியம் என்பதை அறிந்து, அதற்கான காரியங்களை ஆற்ற முனைந்திருந்தார். பல்துறைசார் நிபுணத்துவ ஆலோசகராக ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் உள்ளார்ந்த தீவிரத்தோடு செயலாற்றிய இவர் வடக்குக்கான 'கல்விச் செயலணி' ஒன்றின் தோற்றத்துக்காக அயராதுழைத்தவர்.

தாய்த்தேசம் மீது அவர் கொண்டிருந்த பற்றும், விருப்புமே, தனக்குக் கிடைத்த தனிமனித அடையாளங்களையும் அங்கீகாரங்களையும் கூட இனத்துக்கான மூலதனமாய் மாற்றும் சிந்தனையை அவருக்குக்கொடுத்திருந்தது. அத்தகையபெருமனிதனின் இழப்பால் துயருறும் அதேவேளை அவரின் ஆத்மா அமைதி பெறவும் பிரார்த்திக்கிறேன். அன்னாருக்கு எனது அஞ்சலிகள். - என்றுள்ளது.(05)

# யாழ். மரியன்னை தேவாலயத்தில் ஈஸ்டர் தாக்குதல் நினைவஞ்சலி



கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான 5 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாண மாவட்டத்தில்



உள்ள சில தேவாலயங்களில் நினைவுகூரப்பட்டது.

அந்த வகையில், யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்திலும்உயிர்த்தஞாயிறுகுண்டுத்தாக்குதலில் படுகொலைசெய்யப்பட்டவர்களுக்கானநினைவேந்தல் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது, கடந்த 2029 ஏப்ரல் 21 அன்று தேவ ஆராதனையில்ஈடுபட்டிருந்தபோதுஉயிர்நீத்தவர்களுக்கு ஒருநிமிட அகவணக்கம்செலுத்தப்பட்டதுடன், தேவாலய பிரதான மணி ஒலிக்கப்பட்டு கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மறைமாவட்ட பங்கு குரு முதல்வர் ஜெயரட்ணம்அடிகளார்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து, உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்த பிரார்த்திக்கும் முகமாக மெழுகுவர்த் திகளும் ஏற்றப்பட்டன.

இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவினர் கலந்துகொண்டனர். (05)

# ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு பளை முழங்காவிலில் அஞ்சலி நிகழ்வு







*உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கடந்த 21. .04. 2019 அன்றுஉயிர் நீத்த அனைவரது ஆத்மா சாந்தி அடைய வேண்டியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டியும் பெண்கள் வாழும் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்த நிகழ்வு ஒன்று கிளிநொச்சி பளை முழங்காவில் பகுதியில் நேற்று நடைபெற்றது.*

*இதன்போது இறந்த உறவுகளுக்கு மொழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (05 - 113)*

# ஜனாதிபதி வழிகாட்டலில் மன்னாருக்கு ஸ்மார்ட் நடமாடும் சேவை ஆரம்பம்

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு




ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் மன்னாரிற்கு ஸ்மார்ட் எதிர்காலம் நடமாடும் சேவை சனிக்கிழமை மன்னார் நகரசபை மைதானத்தில் ஆரம்பமாகி உள்ளது.



மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் குறித்த நடமாடும் சேவை இடம்பெற்று வருகின்றது.



மேற்படி நடமாடும் சேவையில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளடங்கலாக திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

குறித்த நடமாடும் சேவையில் 36 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளதுடன் பின்தங்கிய மாணவர்கள் மற்றும் உள்நாட்டு தொழில் முறைமையிலான வேலை வாய்ப்புகளும் குறித்த நடமாடும் சேவையூடாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இஸ்ரேல் தொழில்களை பதிவு செய்தால் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை பெறுதல் குறித்த நடமாடும் சேவை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் எண்ணக்கருவில், இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமாரவின் ஒத்துழைப்போடு, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தமானின் பங்கு பெற்றுதலுடன் சனிக்கிழமை ஆரம்பமான குறித்த நடமாடும் சேவை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை வரை இடம்பெற்றது.

மேலும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் வெளிநாடுகளுக்கு சென்று சட்ட ரீதியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள எத்தணித்துள்ள நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் மேற்படி நடமாடும் சேவையில் கலந்துகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு மன்னாரில் அலுவலகம் திறப்பு

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில்





ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) மன்னார் மாவட்ட அலுவலகம் சனிக்கிழமை காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைக்கப்பட்ட மேற்படி அலுவல கத்தை கடற்றொழில் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளனர்.

நீண்ட காலமாக மன்னார் மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் கிளை அலுவலகம் இயங்காத நிலையில் நேற்று அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், வைத்தியர் கதிர்காமநாதன், ஈ.பி.டீ.பி. கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள், இளைஞர் அணி தலைவர், செயலாளர் பிரதேச இணைப்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)

# பாதாள உலகக் குழுக்களை சேர்ந்த மேலும் 6 பேர் கைது

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது பாதாள உலக குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாக சந்தேகிக்கப்படும் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் பேலியகொடை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் அதுருகிரிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அதுருகிரிய பகுதிச் சேர்ந்த 40 மற்றும் 26 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மோதரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மோதரை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மொரட்டுவை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மொரட்டுவை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் பலப்பிட்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 495 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# காரைதீவு பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்




காரைதீவு பிரதேச செயலக பிரிவின் 2024 ஆம் ஆண்டிற்கான



முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையிலும், பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் ஏற்பாட்டிலும் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான அனுமதியை பெற்று கிடைக்கப்பெறும் வளங்களை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பிலும், விவசாயிகளின், அதிகாரிகளினதும் வேண்டுகோளுக்கமைவாக நீரியல் உயிரின பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

மேலும் அப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதனூடாக கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது. அத்துடன் ஏனைய அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பிலும் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சார்பில் அவரது மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமரும், நாடாளுமன்ற உறுப்பினர் ட. வீரசிங்க சார்பில் அவரது இணைப்பாளர் ஏ.எம். ஜாஹீரும், நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் சார்பில் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறிலும், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபின் இணைப்பாளர் ஏ.ஏ.அசாமும் கலந்துகொண்டிருந்தனர். மேலும் திணைக்களத் தலைவர்கள், துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)



# புத்தளம் தள வைத்தியசாலையில் குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு

(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் தள வைத்தியசாலையில் தற்போது இரத்தம் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் அவசரமாக நேரடியாக வைத்தியசாலைக்கு வருகை தந்தோ அல்லது இரத்த தான முகாம்களை உருவாக்கியோ இரத்த தானம் வழங்கிட உதவுமாறும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விவரங்களுக்கு வைத்தியசாலை முகாமைத்துவ சேவை அதிகாரி எம்.எம்.எம்.பஸாரத் அவர்களோடு 0757007003 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## கதிர்காமத்தில் விபத்து: 18 வயது இளைஞர் சாவு

கதிர்காமம் பொலிஸ் பிரிவிற்குற்பட்ட கம்உதாவ பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கதிர்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞராவார்.

சனிக்கிழமை அதிகாலை கம்உதாவரஜமாவத்தையிலிருந்து மஹசேன பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த இரு ஓட்டோக்கள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் பலத்த காயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஓட்டோவில் பயணித்த இளைஞரொருவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## எல்பிட்டிய - அவித்தாவ விபத்தில் மூவர் இறப்பு

எல்பிட்டிய - அவித்தாவ பிரதான வீதியில் ஓட்டோ ஒன்றை கொள்கலன் வாகனம் மோதியதில் மூவர் உயிரிழந்துள்ளனர் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மேலும் மூவரில் ஒருவர் எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையிலும் இருவர் கராப்பிட்டிய வைத்தியசாலையிலும் சிகிச்சைபெற்றுவருகின்றனர்எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எல்பிட்டியவிலிருந்து அவித்தாவ நோக்கிச் சென்ற ஓட்டோவும், அவித்தாவவிலிருந்து எல்பிட்டிய நோக்கிச் சென்ற கொள்கலனும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.(05)

## தியத்தலாலவை விபத்தில் 7பேர் சாவு; 23 பேர் காயம்









தியத்தலாவில் இடம்பெற்ற மோட்டார் பந்தய போட்டியின்போது இடம் பெற்ற விபத்தில் 7பேர் உயிரிழந்துள்ளனர்.

பந்தயத்தின்போது கார் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இதில் சுமார் 23 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# தொழில் அதிபரின் பயணப் பொதியை திருடிய தம்பதியருக்கு விளக்கமறியல்

தொழிலதிபர் ஒருவரின் பயணப் பொதியைத் திருடிச் சென்ற தம்பதியரை விமான நிலைய பொலிஸார் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்து நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான தம்பதியர் 36 மற்றும் 35 வயதுடையவர்கள். இருவரும் களனி, திப்பிட்டிகொட பிரதேசத்தில் வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர் .குறித்த தொழிலதிபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவுக்கு மாற்றும் சந்தர்ப்பத்தில் இவரது பயணப்பொதியை திருடிய தம்பதியினர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் .

இந்நிலையில் இந்த தொழிலதிபர் பயணப்பொதி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் விமான நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அவரது பயணப்பொதியில் 2,510 அமெரிக்க டொலர்களும், 398,500 இலங்கை ரூபாவும் இருந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு இருவரையும் கைது செய்ததுடன் திருடப்பட்ட 2,510 அமெரிக்க டொலர்களும், 398,500 இலங்கை ரூபாவும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர் சனிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் இருவரையும் நீர்கொழும்பு நீதிவான்நீதிமன்றில்ஆஜர்படுத்தினர். இதனையடுத்து மே மாதம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# கட்டாக்காலியாக திரிந்த மாடுகள் மீது வாகனம் மோதில் இரு மாடுகள் சாவு

## சம்மாந்துறையில் சம்பவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகில் கட்டாக்காலியாக திரிந்த மாடுகள் மீது வாகனம் மோதுண்டதில் இரு மாடுகள் உயிரிழந்துள்ளன.

இவ் விபத்து சனிக்கிழமை இரவு வேளையில் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுவதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு மற்றும் கல்முனை பிரதேசங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்களும், வாகன சாரதிகளும் பலவிதமான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ் விபத்து சம்பந்தமாக சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# குறைந்த வருமானத்தை பெறுகின்ற குடும்பங்களுக்கு அரிசி விநியோகம்

## அட்டாளைச்சேனையில் நேற்று நடந்தது

(எம். எப். றிபாஸ்)

தேசியரீதியாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி விநியோகம் செய்யும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரி.இர்பான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லா கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மற்றும் சமுர்த்தி பெறும் பயனாளிகள் என சுமார் 9703 குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவில் நாட்டிலுள்ள வருமானம் குறைந்த மக்களுக்கு இலவச அரிசி வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் மாதா மாதம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் வஸீர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்



மக்களுக்கான இலவச அரிசி பொதிகளையும் வழங்கி வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள அஸ்வசும பயனாளிகள் இமாமுதீன் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்களான பாயிஸ், கபூர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.(05)

# பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் சந்திப்பு



பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சில சவால்களை உரியவாறு கையாள்வதற்கான இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக் குழுமத்தின் 2024ஆம் ஆண்டுக்கான கோடைகால கூட்டத்தொடர் கடந்த 15ஆம் திகதி வொஷிங்டனில் ஆரம்பமான நிலையில், 17 - 19ஆம் திகதி வரை முக்கிய அமைச்சர் மட்டக் கூட்டங்கள் நடைபெற்றன.

இந்தக் கூட்டத்தில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கலந்துகொண்டார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் நீர்வழங்கல் துறையில் புதிய செயற்றிட்டமொன்றை அறிமுகப்படுத்துவதை முன்னிறுத்தி உலக வங்கியின் நீர்வழங்கல் பிரிவுடன் நெருங்கிப் பணியாற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நீர்வழங்கல் துறையில் தாம் முன்னெடுத்து வரும் மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளிக்கக்கூடியவாறான புதிய செயற்றிட்டமொன்று குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று உலக வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவரகம் ஆகியவற்றின் உதவியுடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கடன்களை மீள ஒருங்கிணைக்கவும், அதன் நிதியியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் முடியும் எனவும், அரச - தனியார் துறையினரின் கூட்டிணைவின் மூலம் நீர்வழங்கல் திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும் எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சில சவால்களை உரியவாறு கையாள்வதற்கான இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான தொழிற்பயிற்சி நிலையங்களை விஸ்தரிப்பதற்கான உதவி, சிறுவர்களின் போசணை, கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு ஏதுவான ஆரம்ப சிறுவர் பராமரிப்பு செயற்றிட்டத்தைக் கட்டியெழுப்புதல், பெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்கக்கூடிய இலக்கிடப்பட்ட நிதி உதவித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் என்பன பற்றி ஆராயப்பட்டதாகவும் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு பின்தள்ளப்பட்ட சமூகங்களின் நீர், சுகாதாரம் மற்றும் சேவை வழங்கல் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவாறான பெறுபேறை அடிப்படையாகக் கொண்ட நிதியுதவி செயற்றிட்டத்தை சகல தரப்பினருடனும் இணைந்து முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# சிவபூமி அறக்கட்டளையால் பெண்கள் சுகநல நிலையம்

## யாழில் நேற்று திறந்துவைப்பு



சிவபூமி அறக்கட்டளை, யாழ் போதனா வைத்தியசாலை ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலைய திறப்பு விழா சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தஷ்லைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.



பெண்கள் சுகநல நிலையம் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனக ஈஸ்வரனால் நேற்று காலை 9.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனக ஈஸ்வரன், வைத்தியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கட்டடம் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனின் பெற்றோர்களான சென்றார் கனகநாயகம் - சத்தியம்பாள் ஞாபகார்த்தமாக அவரது சகோதரி அப்புப்பிள்ளை பாலசுப்பிரமணியம் - சாவித்திரி தேவி தம்பதிகளால் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகனுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# அன்னையர் ஆதரவுக் குழுக்களை வலுப்படுத்தும் பயிற்சிக் கருத்தரங்கு



(எம்.ஏ.றமீஸ்)

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் நிறுவப்பட்டுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களை வலுப்படுத்தி ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் சுகாதார அமைச்சின் சுகாதாரக் கல்விப் பணியகத்தால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த வேலைத்திட்டத்திற்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுகாதார கல்வி பிரிவினால் கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள அன்னையர் ஆதரவுக்குழுக்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களுக்களை வலுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி கருத்தரங்கு சனிக்கிழமை பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்;தியர் எப்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்;தியர் எம்.எச்.றிஸ்பின், மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி எம்.ஜே.எம்.பைறூஸ், பல் வைத்திய நிபுணர் ஏ.ஆர்.கத்தாபி, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம்.அப்துல் மலிக் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு விரிவுரையாற்றினர்.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 70 உறுப்பினர்கள் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர். மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் நிதியுதவி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2024இல் வெளியிடப்பெற்றது